**Sub Court, Eraniel**

**O.S. No. 99/2023**

**Date**: 29.10.2025.

**வா.சா.1 - திரு. ஏசுதாஸ்**

**சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.**

1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

15.04.2021 தேதியிட்ட கிரைய ஒப்பந்த பத்திரத்தில் 6 மாதகாலத்திற்குள் கிரையம் பதியப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ–2ன் படி 14.10.2021 தேதிக்குள் மேற்படி கிரையஆவணம் பதிவு செய்யப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வழக்கு பட்டிகை சொத்தில் வில்லங்கம் ஏதேனும் காணப்பட்டால், கிரைய அக்ரிமென்ட் காலஅவதிக்குள் 1ம் கட்சி தனது சொந்த செலவில் சரிசெய்து கொடுக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். இந்த வழக்கில் நான் 28.07.2023ல் வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதிகளுக்கு அனுப்பினேன் என்றால், சரிதான். வா.சா.ஆ–2ல் உள்ள காலஅவகாசத்திற்குள் நான் பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பவில்லை என்றால், 01.09.2021 அன்று ஜெயசீலனுக்கு Wattsup Call செய்தேன். அவர் வெளிநாட்டில் இருப்பதாகவும், காலஅவகாசம் இருப்பதாகவும் கூறினார். 01.09.2021ல் ஜெயசீலன் என்னிடம் தான் வெளிநாட்டில் இருப்பதாக கூறினார் ஆனால் அவர் எங்கு இருந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் 1ம் பிரதிவாதியை எந்த Cell Phone நம்பரில் தொடர்பு கொண்டேன் என்ற விபரம் எனக்கு நினைவில் இல்லை. அவருடைய செல்போன் எண்ணுக்கு தான் கால் செய்தேன். அந்த செல்போன் நம்பர் இந்திய எண். வெளிநாட்டிலும் உபயோகிக்கலாம்.

எனது முதல் விசாரணை பத்தி 6ல் 1ம் பிரதிவாதி 01.09.2021 அன்று வெளிநாட்டிற்கு சென்றுவிட்டதாக குறிப்பிட்டிருக்கிறேன் என்றால், சரிதான். 01.09.2021 அன்று 1ம் பிரதிவாதி உள்ளூரில் தான் அதாவது சொந்த ஊரான ரீத்தாபுரத்தில் தான் இருந்தார் என்றால், சரியல்ல. 01.09.2021 தேதியன்றோ, அந்த தேதிக்கு முன்போ, பின்போ நான் 1ம் பிரதிவாதியை தொடர்பு கொள்ளவில்லை என்றால், சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தின் காலகெடுவிற்கு நீடித்து செல்லவேண்டும் என்பதற்காக, 1ம் பிரதிவாதி வெளிநாட்டில் இருந்ததாவும், அவரைஅலைபேசியில் நான் தொடர்பு கொண்டதாகவும் தவறுதலாக குறிப்பிடுகிறேன் என்றால், சரியல்ல. 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் உள்ளூரில் தான் இருந்தார்கள் என்றாலும், நான் வழக்கிற்காக அவர்கள் வெளிநாட்டில் இருந்ததாக தவறுதலாக குறிப்பிடுகிறேன் என்றாலும், சரியல்ல. 2ம் பிரதிவாதி மட்டும் உள்ளூரில் இருந்தார். 2ம் பிரதிவாதி, வழக்கு பட்டிகை சொத்தில் அனுபவஸ்தராக இருந்ததால் அவரையும் கட்சி சேர்த்திருக்கிறேன். வா.சா.ஆ–1 மற்றும் வா.சா.ஆ–2 ஆவணங்களின் அடிப்படையில் 2ம் பிரதிவாதி மற்றும் அவரின் கணவரும் வழக்கு பட்டிகை சொத்தில் வாழ்நாள் முழுவதும் அனுபவ உரிமை கொடுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். அவ்வாறு அனுபவ உரிமை கொடுக்கப்பட்டுள்ளதால் தான் நான் 2ம் பிரதிவாதியை வழக்கில் கட்சி சேர்த்திருக்கிறேன் என்றால், சரிதான். வா.சா.ஆ–2ன் படி 14.10.2021 தேதிக்குள் நான் பிரதிவாதிகளுக்கு எழுத்துபூர்வமாக அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால், சரிதான். வழக்கு பட்டிகை சொத்தின் வடக்கு மற்றும் கிழக்கு பக்கங்களில் ரோடு உள்ளது என்றால், சரிதான். வழக்கு பட்டிகை சொத்து மொத்தம் 10 1/2 சென்டு நிலம். அதற்கான Guide line value Rs. 2,31,990/– என்றால்,

சரியல்ல. அதன் மதிப்பு ரூ.1,55,535/– ஆகும். 1ம் பிரதிவாதிக்கு பெலிக்ஸ் என்ற உடன்பிறந்த சகோதரர் உண்டு என்றால், சரிதான். அவருக்கு நான் ரூ.20 லட்சம் கடன் கொடுத்திருந்தேன் என்றால், சரியல்ல. பெலிக்ஸிடமிருந்து நான் சொத்து விலைக்கு எழுதிவாங்கியிருக்கிறேன் என்றால், சரிதான். அந்த சொத்திலும் 2ம் பிரதிவாதிக்கு வாழ்நாள் அனுபவ உரிமை கொடுக்கப்பட்டிருந்தது என்றால், சரிதான். அதனை மறைத்து நான் பெலிக்ஸிடமிருந்து ஏமாற்றி நான் கிரையம் வாங்கியதாக அ.வ.எண்.229/2023 என்ற வழக்கு கூடுதல் மாவட்ட நீதிமன்றம் , பத்மநாபபுரத்தில் நிலுவையில் இருக்கிறது என்றால், சரிதான். அந்த வழக்கினை 2ம் பிரதிவாதி தான் வாதியாக தாக்கல் செய்திருக்கிறார் என்றால், சரிதான். நான் பெலிக்ஸ் மற்றும் 2ம் பிரதிவாதி பெயரில் , இரணியல் உரிமையில் நீதிமன்றத்தில் அ..வ.எண்.85/2023 வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், சரிதான். அ.வ.எண்.229/2023 மற்றும் அ..வ.எண்.85/2023 இரண்டு வழக்குகளையும் ஒன்றாக விசாரிக்கவேண்டும் என்று transfer OP மனு நாகர்கோவில் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால், சரிதான். ஆனால் இந்த வழக்கை அவ்வாறு சேர்த்து விசாரிக்க நான் transfer OP மனுவில் சேர்க்கவில்லை என்றால், சரிதான். 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளிடம் நான் கிரைய தொகையை கொடுத்ததாக எந்த எழுத்துபூர்வமான ஆதாரமும் இல்லை என்றால், சரியல்ல. நான் தொகை கொடுத்தால் தான் நிலத்தை பதிவு செய்து கொடுத்தார்கள். அவ்வாறு நான் தவறுதலாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளிடம் நான் பணம் ஏதும் கொடுக்கவில்லை என்றால், சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு வழக்கு பட்டிகை சொத்தினை விற்பதற்கு எந்த

அவசியமும் ஏற்படவில்லை என்றால், சரியல்ல. 1ம் பிரதிவாதியின் சகோதரர் பெலிக்ஸ் என்னிடம் வாங்கிய ரூ.20,00,000/- கடனுக்கு செக்கீயூரிட்டியாக தான் இந்த வா.சா.ஆ-2, கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டது என்றால், சரியல்ல. வா.சா.ஆ-2 கிரைய ஒப்பந்தம் நான் பெலிக்ஸ்சை பணம் கேட்டு மிரட்டி , நிர்பந்தமாக எழுதி வாங்கப்பட்டது என்றால், சரியல்ல. 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளிடம் வழக்கு பட்டிகை சொத்தை பற்றி பேச்சு வார்த்தை இருந்ததே கிடையாது என்றால், சரியல்ல. இந்த வழக்கு நிவாரணம் காலாவதியாகிவிட்டது என்றால், சரியல்ல. 1ம் பிரதிவாதி வெளிநாட்டில் வசிக்கவில்லை என்றாலும், அவர் உள்ளூரில் தான் இருந்தார் என்றாலும், அவர் வெளிநாட்டில் இருப்பதாக தான் என்னிடம் கூறினார். எனது முதல் விசாரணை மற்றும் வழக்குரையில் வழக்கு பட்டிகை சொத்தின் உரிமை ஆவணமான அசல் செட்டில்மென்டு ஆவணம் , நிதிநிறுவனத்தில் வைக்கப்பட்டதாக நான் குறிப்பிட்டுள்ளது உண்மையில்லை என்றால், சரியல்ல. அப்படிதான் வாதி கூறினார். எந்த நிதிநிறுவனத்தில் அந்த ஆவணத்தை அடகு வைத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. நிதிநிறுவனத்தில் அடகு வைத்தாக நான் வழக்கிற்காக தவறாக குறிப்பிடுகிறேன் என்றால், சரியல்ல. வா.சா.ஆ-2 ன் படி வழக்கு பட்டிகை சொத்தின் அனுபவத்தை எனக்கு கொடுத்ததாக நான் வழக்கிற்காக தவறுதலாக குறிப்பிடுகிறேன் என்றால், சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தின் உரிமை மற்றும் அனுபவம் அனைத்தும் பிரதிவாதிகளிடம் தான் உள்ளது என்றால், சரியல்ல. நான் எந்த காலகட்டத்திலும் வழக்கு பட்டிகை சொத்திற்கு சென்றது மற்றும் அனுபவத்தில் இருந்தது கிடையாது என்றால், சரியல்ல. 1 மற்றும்

2 பிரதிவாதிகளை கஷ்ட படுத்தவேண்டும் என்ற உள்நோக்கத்துடன் இந்த வழக்கை தாக்கல் செய்து , தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.